## தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

மாநிலத்தில் உள்ள சிறு தொழில் நிறுவனங்களுக்கு உதவுவதற்காகவும், அவற்றை மேம்படுத்துவதற்காகவும், தமிழ்நாடு அரசால் 16.03.1970 அன்று தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) நிறுவப்பட்டது.

**தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் செயல்பாடுகள் :**

1) புதிய தொழிற்பேட்டைகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்
2) மூலப்பொருட்கள் விநியோகம்
3) விற்பனை உதவித் திட்டத்தின் கீழ் சந்தை வாய்ப்பளித்தல்.
4) தொழில் குழுமங்கள் மற்றும் பொது வசதி மையம் அமைத்தல்

**தொழிற்பேட்டைகள் அமைத்தல் :**

- அமைவிடம், மின் வசதி, தண்ணீர் வசதி, போக்குவரத்து வசதி மற்றும் இதர வசதிகளை கருத்தில் கொண்டு புதிய தொழிற்பேடைகளை அமைப்பதற்கு தகுதியான நிலங்கள் கண்டறியப்படுகின்றன.
- தனியார் நிலங்களாக இருந்தால் நிலம் கையகப்படுத்துதல் மூலமாகவும், அரசு நிலங்களாக இருந்தால் நில உரிமை மாற்றம் மூலமாகவும் நிலங்கள் பெறப்படுகின்றன.
- இவ்வாறு பெறப்பட்ட நிலங்களில், சாலைகள், தெரு விளக்குகள், தண்ணீர் வசதி, மழைநீர் வடிகால்கள், கழிவுநீர் அகற்றும் வசதி மற்றும் பிற வசதிகளுடன் கூடிய புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்படுகின்றன.
- தமிழக அரசு 35 தொழிற்பேட்டைகளை தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குனரகத்தின் மூலமாக முதலில் நிறுவியது. பின்னர் 1974–ஆம் ஆண்டு இத்தொழிற்பேட்டைகளை முகமை அடிப்படையில் நிர்வகிக்க இந்நிறுவனத்திற்கு மாற்றம் செய்யப்பட்டன.
- சிட்கோ நிறுவனம் 1970–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டதற்கு பின் அதன் பங்காக 59 தொழிற்பேட்டைகளை நிறுவியுள்ளது. தற்போது தமிழகத்தில் 94 தொழிற்பேட்டைகள் (இணைப்பு–4) இந்நிறுவனத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றன.

**சிறப்பம்சங்கள்:**

- 5 சென்ட் முதல் 15 சென்ட் வரையிலான குறுந்தொழில் மனைகள் உருவாக்கப்பட்டு, குறுந்தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.
- தற்போது தொழில் முனைவோர்கள் தொழிற்கூடங்களைவிட தங்களுக்கு தேவையான கட்டிடங்களை அமைத்துக்கொள்ள தொழில் மனைகளை விரும்பிய காரணத்தால், 0.25 ஏக்கர் முதல் 1.00 ஏக்கர் மற்றும் அதற்கு மேலான தொழில் மனைகள் அவரவர் தொழிலின் தேவைக்கேற்ப வழங்கப்படுகின்றது.
- மின்னணு மற்றும் ஆயத்த ஆடை தொழில்களுக்கான அடுக்குமாடி தொழிற்கூடங்கள் 500 ச.அடி, 1000 ச.அடி மற்றும் 1500 ச.அடி ஆகிய அளவுகளில் கிண்டி திரு.வி.க தொழிற்பேட்டையில் அமைக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

- மகளிர் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வண்ணம், மகளிர் தொழிற் பூங்காக்கள் 5 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

  1. கருப்பூர் (சேலம் மாவட்டம்)
  2. வாழவந்தான்கோட்டை (திருச்சி மாவட்டம்)
  3. திருமுல்லைவாயல் (திருவள்ளூர் மாவட்டம்)
  4. திருமுடிவாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்)
  5. கப்பலூர் ( மதுரை மாவட்டம்)

- அரசாணை (நிலை) எண் 7 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை நாள் 31–01–2009–ல் ஆணையிட்டவாறு புதிதாக உருவாக்கப்படும் தொழிற்பேட்டைகளில் 30விழுக்காடு நிலம் குறுந்தொழில் மனைகளாக, குறுந்தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.
- சமுதாயத்தின் அனைத்து பிரிவினரும் தொழில் வளர்ச்சியில் பங்கேற்கும் வண்ணம் கீழ்க்கண்ட பிரிவினருக்கு ஒதுக்கீட்டில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

  30 விழுக்காடு மகளிர் தொழில் முனைவோருக்கு
  10 விழுக்காடு முன்னாள் இராணுவத்தினருக்கு
  10 விழுக்காடு பட்டியல் இனத்தவர் /பட்டியல் பழங்குடியினர் மற்றும் திருநங்கையருக்கு

**ஒதுக்கீட்டு முறை :**

- காலியாக உள்ள தொழில் மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் குறித்த அறிவிப்பு நாளேடுகளில் ஆண்டுக்கு ஒருமுறை விளம்பரப்படுத்தப்படுகிறது. மேலும் இந்நிறுவனத்தின் வலைதளமான www.sidco.tn.nic.in–லும் வெளியிடப்படுகிறது.
- ஒதுக்கீட்டிற்கான விண்ணப்பங்களை இந்நிறுவனத்தின் 19 கிளை அலுவலகங்களிலோ அல்லது தலைமை அலுவலகத்திலோ பெற்றுக்கொள்ளலாம். இந்நிறுவனத்தின் வலைதளமான www.sidco.tn.nic.in–லுமிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, ஒதுக்கீடு கேட்கப்பட்டுள்ள தொழிற்பேட்டை எந்த கிளை மேலாளரின் வரம்பிற்குட்பட்டு வருகிறதோ அவரிடம் சமர்ப்பிக்கலாம்.
- சிட்கோ, தொழில் மற்றும் வணிகத்துறை, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு குறு சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவனங்களின் சங்க பிரதிநிதிகளையும் கொண்ட பரிசீலனைக்குழுவால் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படுகின்றன. தகுதியான தொழில் முனைவோர்கள் மேற்கண்ட குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் முனைவோர்களுக்கு வெளிப்படையாக நடைபெறும் குலுக்கல் முறையில் மனைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.
- சிட்கோ தொழிற்பேட்டைகளில் அமைந்துள்ள அனைத்து மனைகளுக்கும், அரசுத் தொழிற்பேட்டைகளில் 5000 ச.அடிக்கு குறைவான மனைகளுக்கும் சிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரால், ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்படுகின்றன.

- அரசுத் தொழிற்பேட்டைகளில் அமைந்துள்ள 5000 ச.அடிக்கு மேலான மனைகளுக்கு அரசாணை (நிலை) எண் 877 தொழில் துறை நாள் 01–07–1982–இல் ஆணையிட்டவாறு, அரசின் முன் அனுமதி பெற்று ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்படுகின்றன.

**தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் :**

- அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், தெரு விளக்குகள், தண்ணீர் விநியோகம், மழைநீர் வடிகால்கள், கழிவுநீர் அகற்றும் வசதி ஆகியவை புதிய தொழிற்பேட்டைகளில் உருவாக்கப்படுகின்றன. இயங்கும் தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன.
- சிற்றுண்டிச்சாலை, வங்கி, தபால் மற்றும் தந்தி அலுவலகம், தொலைபேசியகம், தீயணைப்பு நிலையம், காவல் நிலையம், பூங்காக்கள், மருந்தகம், குழந்தைகள் காப்பகம் போன்ற வசதிகளும் தொழில் முனைவோர் மற்றும் தொழிலாளர்களின் நலனுக்காக அமைத்து தரப்படுகின்றன
- தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்கள் வாயிலாக உருவாக்கவும் / மேம்படுத்தவும் படுகின்றன.

(i) குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சித்திட்டம் (உட்கட்டமைப்பு மேம்பாடு) (MSE-CDP (ID)

(ii) தொழில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம் (IIUS)

(ii) ஏற்றுமதி மற்றும் அதைச் சார்ந்த செயல்பாடுகளுக்கான மாநிலங்களுக்கு உதவும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம் ( ASIDE)

(iii) தமிழக அரசின் பகுதி–IIதிட்டம் (Part II Scheme)

**குறு,சிறு தொழில் நிறுவனங்கள்– குழும வளர்ச்சித்திட்டம் (MSE-CDP)**

இத்திட்டத்திற்கென, மத்திய அரசிடமிருந்து கீழ்கண்டவாறு நிதி உதவிகள் பெறப்படுகின்றன.

(I) குறு,சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டம் ( உட்கட்டமைப்பு மேம்பாடு)

(II) குறு,சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம் (பொது வசதி மையம்)

**குறு,சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டத்தின்**

**(MSE-CDP) கீழ் உட்கட்டமைப்பு மேம்பாடு**

புதியதொழிற்பேட்டைகளை உருவாக்குதல் மற்றும் நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக, இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு மொத்ததிட்ட மதிப்பில் 60 விழுக்காடு(ரூபாய் 6 கோடி உச்ச வரம்புக்கு உட்பட்டு) மானியமாக வழங்குகிறது. 2011–12 –ஆம் ஆண்டு

வரை, இத்திட்டத்தின் கீழ், மத்திய அரசு ரூபாய் 4,074.12 இலட்சங்கள் திட்ட மதிப்பில் 12 புதிய தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது. இந்த 12 திட்டங்களில் கீழ்க்கண்ட 10 திட்டங்கள் முடிவடைந்துள்ளன.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | தொழிற்பேட்டையின் பெயர் | திட்ட மதிப்பு | மத்திய அரசு மானியம் |
|---|---|---|---|
| 1 | உறங்கான்பட்டி, மதுரை மாவட்டம் | 444.00 | 151.63 |
| 2 | திருமுடிவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம் | 560.00 | 200.00 |
| 3 | திருமுல்லைவாயில், திருவள்ளூர் மாவட்டம் | 475.00 | 159.99 |
| 4 | விச்சூர், திருவள்ளூர் மாவட்டம் | 200.00 | 70.36 |
| 5 | வாழவந்தான்கோட்டை, திருச்சி மாவட்டம் | 615.00 | 118.70 |
| 6 | கருப்பூர், சேலம் மாவட்டம் | 213.00 | 63.59 |
| 7 | எலம்பலூார், பெரம்பலூார் மாவட்டம் | 146.00 | 87.60 |
| 8 | கடகத்தூர், தர்மபுரி மாவட்டம் | 40.00 | 24.00 |
| 9 | ஆசனூார், விழுப்பும் மாவட்டம் | 395.00 | 237.00 |
| 10 | அரக்கோணம், வேலூார் மாவட்டம் | 220.00 | 132.00 |
| மொத்தம் | | 3308.00 | 1244.87 |

கீழ்கண்ட மீதமுள்ள இரு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | தொழிற்பேட்டையின் பெயர் | திட்ட மதிப்பு | மத்திய அரசின் மானியம் |
|---|---|---|---|
| 1 | போலுப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் | 411.00 | 246.60 |
| 2 | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் | 355.12 | 213.00 |
| | **மொத்தம்** | **766.12** | **459.60** |

மேலும், ரூபாய் 2,389.15 இலட்சங்கள் திட்ட மதிப்பில் நடைமுறையில் உள்ள 12 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுக்காக மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த 12 தொழிற்பேட்டைகளில், கீழ்க்காணும் 7 தொழிற்பேட்டைகளில் மேம்பாட்டுப்பணிகள் முடிவடைந்து விட்டன.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | தொழிற்பேட்டையின் பெயர் | திட்ட மதிப்பு | மத்திய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் |
|---|---|---|---|---|
| 1 | ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம் | 59.86 | 23.94 | 23.94 |
| 2 | குறிச்சி, கோயம்புத்தூர் மாவட்டம் | 152.14 | 34.96 | 60.85 |
| 3 | கப்பலூர், மதுரை மாவட்டம் | 187.50 | 44.1 | 75.00 |
| 4 | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் | 34.95 | 13.52 | 13.98 |
| 5 | முகுந்தராயபுரம், வேலூர் மாவட்டம் | 133.45 | 52.65 | 53.38 |
| 6 | ஊட்டி, நீலகிரி மாவட்டம் | 14.00 | 5.58 | 5.60 |
| 7 | கணபதிபாளையம், திருப்பூர் மாவட்டம் | 45.82 | 27.49 | 13.75 |
| **மொத்தம்** | | **627.72** | **202.24** | **246.50** |

மீதமுள்ள 5 தொழிற்பேட்டைகளில் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அவை பின்வருமாறு (ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | தொழிற்பேட்டையின் பெயர் | திட்ட மதிப்பு | மத்தியஅரசின் மானியம் | மாநில அரசின் மானியம் |
|---|---|---|---|---|
| 1 | ஆலத்தூர், காஞ்சிபுரம் மாவட்டம் | 444.96 | 266.98 | 133.49 |
| 2 | காக்களூர், திருவள்ளூர் மாவட்டம் | 423.33 | 254.00 | 127.00 |
| 3 | கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் | 202.00 | 121.20 | 60.60 |
| 4 | ஆத்தூர், கரூர் மாவட்டம் | 397.38 | 238.43 | 119.21 |
| 5 | மேட்டூர், சேலம் மாவட்டம் | 293.76 | 176.25 | 88.13 |
| **மொத்தம்** | | **1761.43** | **1056.86** | **528.43** |

2012–13–ஆம் ஆண்டில், சிட்கோ 4 புதிய தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்புவசதிகளை உருவாக்குதல் மற்றும் நடைமுறையில் உள்ள ஒரு தொழிற்பேட்டையின் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை பின் வருமாறு மேற்கொண்டுள்ளது.

**2012–13 ஆம் ஆண்டில் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பை உருவாக்குதல்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | அமைவிடம் | திட்ட மதிப்பு | மத்திய அரசின் மானியம் | சிட்கோ பங்கு | நிலவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | பாளையபட்டி, தஞ்சாவூர் மாவட்டம் | 499.00 | 299.40 | 199.60 | திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு ஆணை எதிர்ப்பார்க்கப் படுகிறது |
| 2 | வாணியம்பாடி, வேலூர் மாவட்டம் | 56.64 | 33.98 | 22.66 | மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு திட்டம் நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது. |
| 3 | மாத்தூர்(புதியது), புதுக்கோட்டை மாவட்டம் | 235.00 | 141.00 | 94.00 | மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு திட்டம் நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது. |
| 4 | விருதுநகர் (நகர்ப்புறம்), விருதுநகர் மாவட்டம் | 319.00 | 191.00 | 128.00 | மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுதிட்டம் நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது. |
| மொத்தம் | | 1109.64 | 665.38 | 444.26 | |

**2012–13 ஆம் ஆண்டில் தொழில்பேட்டைகளின்உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் :**

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | தொழிற் பேட்டையின் பெயர் | திட்ட மதிப்பு | மத்திய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | பயனாளிக ளின் பங்களிப்பு | நிலவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மலுமிச்சம்பட்டி, கோயம்புத்தூர் மாவட்டம் | 200.00 | 113.25 | 60.00 | 26.75 | மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு ஆணை எதிர்பார்க்கப் படுகிறது. |

**குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சித்திட்டத்தின் [ MSE-CDP] கீழ் பொது வசதி மையம் அமைத்தல்**

குறு, சிறுதொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டமானது (MSE-CDP) தொழில்நிறுவனங்களின் தேவையை பூர்த்திசெய்வதற்காக, பூகோள பரப்பில் தொகுப்பாக அமைந்துள்ள குழுமங்களை உருவாக்கி, குறு,சிறு தொழில் நிறுவனங்கள் ஆதாரங்களை பெறுவதற்கும் / நிதிவசதி பெறுவதற்கும் மற்றும் சந்தை வாய்ப்பை பெருக்குவதற்கும் உதவி செய்கிறது.

குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சித்திட்டத்தின் [MSE-CDP] கீழ் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டு வரும் பொது வசதி மையங்களை செயல்படுத்தும் முகமை நிறுவனமாக சிட்கோ நிறுவனம், 09.08.2011 ஆம் நாளிட்ட குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண்.24 ன்படி நியமிக்கப்பட்டுள்ளது.தமிழ்நாட்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த மொத்தம் 53 குழுமங்கள் கண்டறியப் பட்டுள்ளன. இதில் 18 குழுமங்களுக்கு மொத்த திட்டமதிப்பு ரூ. 77.98 கோடியில் மானியமாக ரூ.53.89கோடி மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு ரூ.5.76 கோடி மானியம் அளித்துள்ளது. இந்த 18 திட்டங்களில் 7 திட்டங்கள் ஏற்கனவே முடிவடைந்துவிட்டன. மீதமுள்ள 11 பொது வசதி மையத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இக்குழுமங்களின் மூலமாக சுமார் 15,000 நபர்கள் வேலை வாய்ப்பு பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறு,சிறு தொழில் நிறுவனங்களின் குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பொது வசதி மையம் அமைப்பது தொடர்பான திட்ட ஒதுக்கீடு பின்வாருமாறு

| | |
|---|---|
| மத்திய அரசு மானியம் | 70 விழுக்காடு<br>( அதிகபட்ச திட்டத் தொகை ரூ.15கோடி) |
| தமிழ்நாடு அரசு மானியம் | 10 விழுக்காடு<br>( அதிகபட்ச மானியம்ரூ.1கோடி) |
| சிறப்பு நோக்க ஊர்தி / வங்கிக் கடன் | 20 விழுக்காடு |

மாநிலத்தில் குறு,சிறு தொழில் நிறுவனங்கள் குழும வளர்ச்சித் திட்டத்தின் (பொது வசதி மையம்) செயல்பாட்டின் விபரம் கீழ்க்கண்டவாறு இணைப்புகளில் தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| அ. மத்திய அரசிடமிருந்து முழு ஒப்புதல் பெறப்பட்ட திட்டங்கள் | – 18 |
| ஆ. மத்திய அரசினால் கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள் | –12 |
| இ. மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்ட திட்டங்கள் மற்றும் தயாரிப்பு நிலையில் உள்ள திட்டங்கள் | – 23 |

**தமிழ்நாடு அரசின் பகுதி –2 திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு அரசிடமிருந்துஇதுவரையில் ரூபாய் 127.50 இலட்சம் கீழ்க்கண்டவாறு மானியமாகப் பெற்றுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | பயனடைந்த தொழிற் பேட்டை களின் எண்ணிக்கை | ஒப்பளிப்பு வழங்கப் பட்ட திட்ட மதிப்பீடு | பெறப் பட்ட தமிழ்நாடு அரசின் மானியம் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| 1 | 2006– 2007 | 3 | 101.50 | 25.00 | பணிகள் முடிவடைந்து விட்டன. |
| 2 | 2007 –2008 | 3 | 114.00 | 25.00 | பணிகள் முடிவடைந்து விட்டன. |
| 3 | 2008–2009 | 3 | 120.00 | 20.00 | பணிகள் முடிவடைந்து விட்டன. |
| 4 | 2011 – 2012 | 5 | 150.00 | 30.00 | 4 இடங்களில் பணிகள் முடிவடைந்து விட்டன. ஆர்.கே. பேட்டையில் மட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 5 | 2012 – 2013 | 3 (தூத்துக்குடி கீழநகாச்சி, குடிமங்கலம்) | 110.00 | 27.50 | பணிகள் நடைபெற்று வருகிறன. |
| **மொத்தம்** | | | **595.50** | **127.50** | |

**மூலப்பொருட்கள் விநியோகம்**

மூலப்பொருட்களாகிய இரும்பு மற்றும் எஃகு, மெழுகு, பொட்டாசியம் குளோரேட் மற்றும் தமிழ்நாடு காகிதத்தாள் நிறுவனத்தின் காகிதம் ஆகியவைகளை அம்பத்தூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சாத்தூர் மற்றும் சிவகாசி ஆகிய இடங்களில் உள்ள மூலப்பொருள் கிடங்குகளின் வழியாகவும் ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய கிளை அலுவலகங்களின் வழியாகவும் சிட்கோ நிறுவனம் விநியோகம் செய்து வருகின்றது.

2012–13 ஆம் நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, எட்டிய சாதனை, ஆகியவை பின்வருமாறு

| வ. எண் | மூலப் பொருள் | 2012–13 இலக்கு | | 2012–13 சாதனை (மார்ச்–2013 வரை) | |
|---|---|---|---|---|---|
| | | அளவு (மெ. டன்னில்) | மதிப்பு ரூ. (இலட்சத்தில்) | அளவு (மெ. டன்னில்) | மதிப்பு ரூ. (இலட்சத்தில்) |
| 1 | இரும்பு மற்றும் எஃகு | 5181.07 | 2239.71 | 3122.43 | 1472.70 |
| 2 | பாரபின் மெழுகு | 5300.86 | 4646.30 | 3679.30 | 3631.13 |
| 3 | காகிதம் (நேரடி) | 242.09 | 147.00 | 177.02 | 106.95 |
| 4 | காகிதம் (முகவாண்மை) | 494.44 | 269.60 | 874.62 | 499.37 |
| 5 | பொட்டாசியம் குளோரேட் | 5.00 | 3.34 | 4.00 | 3.73 |
| **மொத்தம்** | | 11223.46 | 7305.95 | 7857.37 | 5713.88 |

**விற்பனை உதவித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு சிட்கோ உதவி செய்கிறது. சிட்கோவின் விற்பனை உதவித் திட்டத்தின் கீழ் பதிவு செய்த குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் சார்பாக சிட்கோ, மாநில அரசுத் துறைகள்/நிறுவனங்களை அணுகி வழங்கல் ஆணைகளை பெற்று உதவுகிறது. சிட்கோ நிறுவனத்தால் பெறப்பட்ட வழங்கல் ஆணைகள், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு இடையே பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

தரமான பொருட்களை சரியான நேரத்தில் வழங்கப்படுவதை சிட்கோ நிறுவனம் கண்காணித்து வருகிறது. வழங்கப்பட்ட பொருட்களுக்கு அரசுத் துறைகள் / பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் தொகையில் 3 விழுக்காடு ஆலோசனைக் கட்டணமாக பிடித்தம் செய்த பின்னர் சிறு தொழில் நிறுவனங்களின் பொருட்களுக்கு உண்டான தொகை வழங்கப்படுகிறது.

சிட்கோ நிறுவனம் மார்ச்–2013 வரை ரூ.125.91 இலட்சம் மதிப்பிலான வழங்கல் ஆணைகளைப் பெற்று நிறைவேற்றி இருக்கிறது.

**<u>தகவலறியும் உரிமைச் சட்டம் – 2005 :</u>**

தகவலறியும் உரிமைச் சட்டம் – 2005 ஐ சிட்கோவில் செயற்படுத்த கீழ்க் காணும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

| | | |
|---|---|---|
| மேல்முறையீட்டு<br>அலுவலர் | பொது மேலாளர் ( நிர்வாகம்)<br>தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்<br>தலைமை அலுவலகம்,<br>சென்னை – 600 032. | தொலைபேசி :<br>044 – 22501694<br><br>தொலை நகலி<br>044 –22500792 |
| பொதுத்தகவல்<br>அலுவலர் | செயலாளர் மற்றும் பொது மேலாளர் (நிதி )<br>தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்<br>தலைமை அலுவலகம்,<br>சென்னை – 600 032. | தொலைபேசி<br>044 – 22501977<br><br>மின்அஞ்சல்<br>044 – 22500792 |
| உதவிபொதுத்தகவல்<br>அலுவலர்கள் | கிளை மேலாளர்கள்,<br>கிளை அலுவலகங்கள் /<br>கிடங்கு அதிகாரிகள்,<br>மூலப்பொருள் கிடங்குகள்<br>சிட்கோ. | முகவரி மற்றும் தொடர்பு எண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது |

**<u>சிட்கோ குறித்த விவரங்கள்</u>**

| | | |
|---|---|---|
| துறை அமைச்சர் | – | திரு ப. மோகன்<br>மாண்புமிகு ஊரகத் தொழில்கள் துறை அமைச்சர்,<br>தலைமைச் செயலகம், சென்னை 600 009. |
| அரசு செயலர்,<br>குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை.<br>தலைமைச்செயலகம், சென்னை –9 | – | திரு. கி.தனவேல், இ.ஆ.ப. |
| தலைவர்<br>சிட்கோ – சென்னை –32. | – | திரு. ஜே.சி.டி.பிராபகர், பி.எ.பி.எல். |
| நிர்வாக இயக்குநர்<br>சிட்கோ – சென்னை –32 | – | முனைவர்.தா. கார்த்திகேயன், இ.ஆ.ப. |

**சிட்கோ அலுவலகங்கள்– தலைமை அலுவலகம்**

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்,
திரு வி. க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி எண் –22501461, 22501422, 22501210, 2500073, 22500317
நிகரி எண்: 22500792 மின் அஞ்சல் : ho.sidco@nic.in இணையதளம்: www.sidco.tn.nic.in

**கிளை அலுவலகங்கள்**

| வ. எண் | கிளை அலுவலகங்களின் பெயர் | தொடர்பு கொள்ள வெண்டிய முகவரி | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 1. | அம்பத்தூர் | கிளைமேலாளர்,<br>சிட்கோ கிளை அலுவலகம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>அம்பத்தூர்,<br>சென்னை – 600 058 | 044 – 26253644 |
| 2. | கோயம்புத்தூர் | கிளைமேலாளர்,<br>சிட்கோ கிளை அலுவலகம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>குறிச்சி,<br>கோயம்புத்தூர் 641 021. | 0422 – 2672825 |
| 3 | கடலூர் | கிளைமேலாளர்,<br>சிட்கோ கிளை அலுவலகம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>செம்மண்டலம்,<br>கடலூர்–607 001 | 04142–225134 |
| 4. | ஈரோடு | கிளைமேலாளர்,<br>சிட்கோ கிளை அலுவலகம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>சென்னிமலை ரோடு,<br>ஈரோடு–638 001 | 0424 – 2275237 |
| 5. | கிண்டி | கிளைமேலாளர்,<br>சிட்கோ கிளை அலுவலகம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>திரு.வி.க. தொழிற்பேட்டை,<br>கிண்டி, சென்னை – 600 032 | 044 – 22501482 |
| 6. | ஒசூர் | கிளைமேலாளர்,<br>சிட்கோ கிளை அலுவலகம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>ஒசூர் – 635 126 | 04344 – 276975 |
| 7. | காக்களூர் | கிளைமேலாளர்,<br>சிட்கோ கிளை அலுவலகம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>காக்களூர்– 602 003 | 044 – 27665310 |

| | | | |
|---|---|---|---|
| 8. | கிருஷ்ணகிரி | கிளைமேலாளர்,<br>சிட்கோ கிளை அலுவலகம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>கிருஷ்ணகிரி – 635 001 | 04343 – 236092 |
| 9. | மதுரை | கிளைமேலாளர்,<br>சிட்கோ கிளை அலுவலகம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை,கே. புதூர்,<br>மதுரை – 625 007 | 0452 – 2566897 |
| 10. | சேலம் | கிளைமேலாளர்,<br>சிட்கோ கிளை அலுவலகம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>ஐந்து ரோடு,சேலம்– 636 004 | 0427 – 2448520 |
| 11. | சிவகங்கை | கிளைமேலாளர்<br>சிட்கோ கிளை அலுவலகம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>சிவகங்கை – 623 560 | 04575 – 240636 |
| 12. | தஞ்சாவூர் | கிளைமேலாளர்,<br>சிட்கோ கிளை அலுவலகம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>நாஞ்சிக்கோட்டை ரோடு,<br>தஞ்சாவூர் – 613 006 | 04362 – 255220 |
| 13. | திருமழிசை | கிளைமேலாளர்,<br>சிட்கோ கிளை அலுவலகம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>திருமழிசை,சென்னை-602107 | 044 – 26811769 |
| 14. | திருமுல்லைவாயல் | கிளைமேலாளர்,<br>சிட்கோ திருமுல்லைவாயல்<br>கிளை அலுவலகம்,<br>சிட்கோ மகளிர் தொழில் பூங்கா<br>திருமுல்லைவாயல்<br>சென்னை- 600 062 | 044 - 26366687 |
| 15. | திருமுடிவாக்கம் | கிளைமேலாளர்,<br>சிட்கோ கிளை அலுவலகம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>திருமுடிவாக்கம்,<br>சென்னை – 600 044 | 044 – 24780684 |
| 16. | திருநெல்வேலி | கிளைமேலாளர்,<br>சிட்கோ கிளை அலுவலகம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>பேட்டை,<br>திருநெல்வேலி 627 010 | 0462 - 2342073 |
| 17. | திருச்சி | கிளைமேலாளர்,<br>சிட்கோ கிளை அலுவலகம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>அரியமங்களம்,<br>திருச்சி – 620 010 | 0431 - 2441177 |

| | | | |
|---|---|---|---|
| 18. | வேலூர் | கிளைமேலாளர்,<br>சிட்கோ கிளை அலுவலகம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>காந்தி நகர்,வேலூர்– 632 006 | 0416 - 2242871 |
| 19. | விருதுநகர் | கிளைமேலாளர்,<br>சிட்கோ கிளை அலுவலகம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>விருதுநகர் – 626 003 | 04562 - 252683 |

**மூலப்பொருள் கிடங்குகள்**

| வ. எண் | சிட்கோவின் மூலப்பொருள் கிடங்கு | தொடர்பு கொள்ள வெண்டிய முகவரி | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 1. | அம்பத்தூர், சென்னை | சிட்கோ மூலப்பொருள் கிடங்கு,<br>தொழிற்பேட்டை,அம்பத்தூர்,<br>சென்னை - 600 058 | தொலைபேசி எண்<br>044 – 26241586 |
| 2. | கோயம்புத்தூர் | சிட்கோ மூலப்பொருள் கிடங்கு,சிட்கோ தொழிற்பேட்டை,<br>குறிச்சி, கோயம்புத்தூர் – 641 021 | தொலைபேசி எண்<br>0422 – 2672867 |
| 3. | மதுரை | சிட்கோ மூலப்பொருள் கிடங்கு,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>கே. புதூர், மதுரை – 625 007 | தொலைபேசி எண்<br>0452 – 2566957 |
| 4. | திருச்சி | சிட்கோ மூலப்பொருள் கிடங்கு,<br>சிட்கோ தொழிற்பேட்டை,<br>அரியமங்கலம்,திருச்சி – 620 010 | தொலைபேசி எண்:<br>0431 – 2441552 |
| 5. | சாத்தூர்<br>துணை கிடங்கு | சிட்கோ மூலப்பொருள் கிடங்கு, 345/55, வெம்பக்கோட்டை ரோடு, சாத்தூர்– 626 203 | தொலைபேசி எண்:04562 – 260314 |
| 6. | சிவகாசி<br>துணை கிடங்கு | சிட்கோ மூலப்பொருள் கிடங்கு,<br>கூட்டுறவு தொழிற்பேட்டை<br>ஸ்ரீவில்லிபுத்தூர் ரோடு,<br>சிவகாசி – 626 124 | தொலைபேசி எண்:<br>04562 – 254598 |